செய்தி வெளியீடு எண். 236 நாள்.27.3.2012

**<u>சென்னை எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் பயிலும் 50 மாணவ–மாணவியருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விலையில்லா மடிக்கணினி</u>**

**<u>மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்டச் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி வழங்கினார்.</u>**

சென்னை எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் பயிலும் 50 மாணவ–மாணவியருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விலையில்லா மடிக்கணினிகளை மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்டச் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி வழங்கினார்.

சென்னை எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் உள்ள முன்காண் திரையரங்கத்தில் இன்று (27.3.2012) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விலையில்லா மடிக்கணினி மாணவ–மாணவியருக்கு வழங்கும் விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு, மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்கள் தலைமை வகித்து, இயக்குதல் துறை, ஒளிப்பதிவுத் துறை, ஒலிப்பதிவுத் துறை, படத்தொகுப்பு, படப்பதனிடுதல் ஆகிய ஐந்து பிரிவுகளில் மூன்றாமாண்டு திரைக்கலை பயிலும் 50 மாணவ–மாணவியருக்கு மடிக்கணினிகளை வழங்கி பேசும்போது கூறியதாவது:-

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் இந்தியாவிலேயே முன்னோடி நிறுவனமாகும். தமிழ்த் திரையுலகம் மட்டுமல்லாமல் இந்தியத் திரையுலகிலும் தலைச்சிறந்து விளங்குகின்ற படைப்பாளிகளை உருவாக்கும் கலைக்கூடமாக இந்நிறுவனம் விளங்குகிறது.

திரைக்கலையின் மகத்தான சக்தியை உணர்ந்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் திரைப்படக் கல்லூரியில் மாணவர் பயிற்சிக்கு உலகத் தரம் வாய்ந்த உபகரணங்களை பெற்றுத் தருவதில் மிகவும் ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள். இன்று திரைப்படத் தயாரிப்பு மாபெரும் மாற்றத்தை கண்டு வருகிறது. முன்பு படத் தொகுப்பு, ஒலிப்பதிவு துறைகளில் மட்டும் இருந்த கணினித் தொழில்நுட்பம் இன்று படப்பிடிப்பு நடத்துவதிலிருந்து வெள்ளித்திரையில் திரைப்படத்தை மக்கள் கண்டுகளிக்கும் வரை எட்டுதிக்கும் பரவி விட்டது.

இதனை உணர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக ரூ.15 இலட்சம் மதிப்பிலான உயர்தர டிஜிட்டல் திரைவீழ்த்தி கருவி, ரூ.15 இலட்சம் மதிப்பிலான ஆவிட் நான் லீனியர் படத்தொகுப்புக் கருவிகள், ரூ.4 இலட்சம் மதிப்பிலான இண்டலி ஸ்கிரீன் என்னும் கணினி தொழில் நுட்பம் சார்ந்த கல்வி போதனை உபகரணங்கள், படப்பிடிப்பின் போது ஒலிகளை துல்லியமாக பதிவு செய்ய ரூ.5 இலட்சம் செலவில் ஒலிப்பதிவு

கருவி மற்றும் அனைத்துப் பிரிவு தலைவர்களுக்கும் மடிக்கணினி என இக்கல்லூரியை மாறிவரும் திரையுலகிற்கு ஏற்ப நவீனமயமாக்கி வருகிறார்கள்.

தொலைநோக்கு பார்வையுடன் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், மேலைநாடுகளில் மட்டுமே கிடைக்கின்ற உயரிய தொழில்நுட்பம் சார்ந்த சிறப்பு பயிற்சிகளை நமது திரைப்படக் கல்லூரியிலேயே உருவாக்கிட வேண்டும் எனும் சீரிய எண்ணத்தில் இக்கல்லூரியில் தென்னிந்தியாவிலேயே முதன்முறையாக உலகத் தரத்தில் அதி நவீன அனிமேஷன் மற்றும் விசுவல் எபெக்ட்ஸ் என்ற புதிய பாடத்திட்டத்தை தொடங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

அறிஞர் அண்ணா போன்ற மாபெரும் தலைவர்கள் உருவானது நுலகத்தில் தான் என்று கூறுவார்கள். ஆனால் இன்று நூலகத்தில் உள்ள ஆயிரக்கணக்கான புத்தகங்கள் உங்கள் விரல் நுனியில் கணினியில் அடங்கியிருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். இன்றைய தொழில் நுட்ப சிறப்பின் மூலம் உலக அறிவினை உட்கார்ந்த இடத்திலேயே பெற்று கல்வி மேம்பாடு அடையும் வண்ணம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

முன்பு செல்வந்தர்கள் மட்டுமே கணினியை பயன்படுத்தும் நிலை இருந்தது. கஷ்டப்படும் ஏழைகளின் குழந்தைகள் வேடிக்கை பொருளாகத்தான் கணினியை பார்க்க முடிந்தது. இன்று இந்த நிலையை மாற்றி அனைத்து மாணவ–மாணவிகளும் கணினியை பயன்படுத்தும் மாற்றத்தை உருவாக்கியவர் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள்.

ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்காக பல்வேறு நலத்திட்டங்களை தந்தவர் நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள். கல்வி வளர்ச்சிக்கு பல கோடி ரூபாயினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கி உள்ளார்கள். இக்கணினியை சிறப்பாக பயன்படுத்தி புதிய திரைப்பட உத்திகளை கற்றுக் கொண்டு, புதிய பாதை வகுத்து, தலைச்சிறந்த திரைப்படங்களை உருவாக்கி தமிழ்நாட்டிற்கும், திரைப்படக் கல்லூரிக்கும் பெருமை தேடித் தருமாறு வாழ்த்துகிறேன். இவ்வாறு மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்டச் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்கள் பேசினார்.

விழாவிற்கு, முன்னிலை வகித்து, வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.சைதை துரைசாமி அவர்கள் பேசும்போது கூறியதாவது:-

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் நல்லாட்சியில், 9 இலட்சம் முதல் 12 இலட்சம் இளைஞர்கள், மாணவர்களுக்காக மடிக்கணினி வழங்கும் அற்புதமான திட்டத்தை சமூகத்திற்கு வழங்கியுள்ளார்கள். குறிப்பாக, மாணவ சமுதாயத்திற்கு வழங்கியுள்ளார்கள். வழங்கப்பட்டுள்ள மடிக்கணினி மூலம் நாட்டு நடப்புகளையும், செய்தித்தாள்களில் உள்ள செய்திகளையும் தெளிவாக அறிய முடியும். இந்த சமூகத்தில் மிகச்சிறந்த இடத்திற்கு வர

வேண்டுமானால் விடாமுயற்சியும், கடின உழைப்பும், தேடும் பசியும் மிக அவசியமாகும். அறிவுப்பசி உள்ள மாணவர்களுக்கு இந்த மடிக்கணினி அற்புதமான தீனி.

ஒரு படைப்பாளிக்கு இருக்கின்ற ஆற்றலை அபிவிருத்தி செய்ய மடிக்கணினி அவசியமாகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தொலைநோக்கு பார்வையோடு இந்த திட்டத்தை உருவாக்கி உள்ளார்கள். இதன் மூலம் எதிர்காலத்தில் நம் மாணவர்கள் இந்தியாவிலேயே தலைச்சிறந்த மாணவர்களாக அறிவுவளர்ச்சியில் திகழ்வார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்த அத்தனை திட்டங்களும் சமூக வளர்ச்சியின் பயனாக ஏற்படும் சமூக மாற்ற திட்டங்களாகும். இன்று வழங்கப்பட்டுள்ள மடிக்கணினியை மாணவர்கள் நல்லமுறையில் பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.சைதை துரைசாமி அவர்கள் பேசினார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், இ.ஆ.ப. வரவேற்று பேசினார்.

வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.கே.அசோக், சென்னை மைய பல்தொழில்நுட்ப கல்லூரி முதல்வர் முனைவர் கா.சுந்தரமூர்த்தி, எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன முதல்வர் திரு.ஆர்.ஸ்ரீதரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மாணவர் பேரவைத் தலைவர் திரு.ஆ.இன்னாசிப்பாண்டியன் நன்றி கூறினார். விழா நிகழ்ச்சிகளை செய்தி மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு.கு.தாணப்பா தொகுத்து வழங்கினார்.

விழாவில், செய்தி மக்கள் தொடர்புத் துறை இணை இயக்குநர் திரு.தங்க புகழேந்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9,